**பாலிந்தநுவர பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாலிந்தநுவர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஆம் ஆண்டின் போது இடர் முகாமைத்துவ நிலையத்திலிருந்து நன்கொடையாகக் கிடைத்த நான்கு படகு என்ஜீன்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பொருள் மெய்மையாய்வுகளின் மூலம் இனங்காணப்பட்ட ஏலமிடப்பட்ட, அழிக்கப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட விடயங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குரியதாகக் காணப்படுகின்ற G1 குழாய்கள் 178 மற்றும் 20x20 கூடாரமொன்று என்பவற்றின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பாலிந்தநுவர பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அகலவத்த பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டியதாக ரூபா 5,931,815 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அகலவத்த பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பாலிந்தநுவர பிரதேச சபையிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 5,342,424 தொகை மற்றும் பாலிந்தநுவர பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 7,782,632 தொகை என்பன காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த கொடுக்கல் வாங்கல்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, பொருட் பதிவேடு, பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் உரித்துகளைக் காண்பிக்கும் பதிவேடு, உரித்துறுதி மற்றும் கையளிப்பு கட்டளை என்பன இன்மையினால் ரூபா 71,362,164 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த / ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் | | |
| | (i) 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தியடைந்த பிரதேசமாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட ஏதாவது அசையாத சொத்து அல்லது அசையாத ஆதனங்கள் தொடர்பாக வருடாந்த பெறுமதியின் அடிப்படையில் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 143(1) ஆம் பிரிவு | - | அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் சபையினால் ஆதனவரிக்காக புதிய இனங்காணல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 297,120,250 | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | சபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் அவற்றின் உபகரணங்கள் தொடர்பாக முழுமையான மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிதிச் | - | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவுப் |

சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி — பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,627,951 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,692,354 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,468,245 | 2,255,986 | 2,595,487 | 263,712 | 2,515,374 | 2,288,901 | 2,608,796 | 547,615 |
| வாடகை | 5,457,000 | 3,180,313 | 4,345,591 | 249,638 | 6,163,700 | 4,360,899 | 4,887,531 | 249,638 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 250,000 | 155,203 | 204,500 | - | 250,000 | 193,550 | 261,550 | - |
| ஏனைய வருமானம் | 11,193,000 | 7,071,697 | 4,000,486 | 13,927,229 | 12,980,000 | 8,067,390 | 6,958,379 | 9,657,215 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் மொத்த நிலுவை வருமானம் ரூபா 10,454,468 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையில் ரூபா 12,663,199 தொகையாக இருந்தது. ஆண்டின் பெறுவனவுகள், பதிவழித்தல்கள் மற்றும் சீராக்கல்கள் ரூபா 8,677,088 ஆக இருந்ததுடன் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 14,440,579 ஆகும்.

#### 2.2.3 வீதவரியும் வரியும்

**(அ) ஆதன வரி**

(i) மீளாய்வாண்டிற்கான ஆதன வரி சிட்டையிடல் ரூபா 1,018,277 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 899,608 தொகை அதாவது 88 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதியான ரூபா 493,536 தொகையில் ரூபாா 410,166 தொகை அதாவது 83 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 202,040 ஆகும். இதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆதனவரி அறவிடலின் செயல்முன்னேற்றம் சதவீதம் 87 ஆகும்.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த ஆதன வரிக்காக காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஆ) ஏக்கர் வரி**

(i) மீளாய்வாண்டிற்கான ஏக்கர் விரி சிட்டையிடல் ரூபா 140,609 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 99,243 தொகை அதாவது 71 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை மீதியான ரூபா 52,364 தொகை மற்றும் ரூபா 39,589 அதாவது 76 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 54,141 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒட்டுமொத்த ஏக்கர் வரி அறவிடலின் செயல்முன்னேற்றம் 72 சதவீதம் மாத்திரமாக இருந்தது.

**2.2.4 ஏனைய வருமானம்**

**(அ) அறிவித்தல் பதாதைக் கட்டணம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 நவம்பர் மாத 06 ஆந் திகதிய 1940 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முறையில் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள அறிவித்தல் பதாதைகள் / விளம்பர அறிவித்தல்கள் மூலம் கட்டணம் அறவிடுவதற்கு சபையினால் 2017 ஆம் ஆண்டில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைத்தல் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைக்கும் இடங்களில் நிறுத்தி வைக்கப்படுகின்ற முச்சக்கர வண்டிகளைப் பதிவு செய்து கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 900,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,000,000 ஆகக் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள்

மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உபவிதி**

--------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் செயற்திட்டத்தின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதியொன்று தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 12 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

-----------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பான மீளாய்வாண்டின் போது சபை அறிந்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

--------------------------------------------------------------

(அ) அகலவத்த பிரதேச சபை 2006 ஏப்ரல் 15 ஆந் திகதி முதல் பாலிந்தநுவர மற்றும் அகலவத்த என்ற இரண்டு பிரதேச சபைகளாக பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் இதன் விளைவாக பாலிந்தநுவர பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பகிர்ந்து கொள்வதற்கு 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வீதி விளக்கு தூண்களை சரியாக இனங்காணக்கூடிய வகையில் இலக்கமிட்டு நடாத்திச் செல்வதற்கோ அல்லது சரியாக நாளதுவரையாக்கப்பட்ட பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக போயா தினங்களில் பன்றி இறைச்சி விற்பனை செய்யும் இடத்தில் வாடகையாளர் தொடர்ச்சியாக வாடகைத் தொகை செலுத்தாமல் புறக்கணித்திருந்தமையால் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 84,060 தொகையான தண்டப்பணம் கிடைக்க வேண்டியிருந்ததுடன் இந்த தண்டப்பணம் பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்பட்ட கைத்தொழில் வரி செலுத்தப்பட வேண்டிய கைத்தொழில்களை இனங்காண்பதற்கு சரியான மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விநியோகிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களைக் கையளித்தல் மற்றும் அதிகாரங்களை அமுல்படுத்தல் தொடர்பான ஆலோசனைக் கோவையில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடைமுறைகளின் பிரகாரம் சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அனேக கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) உள்ளூராட்சி நிறுவன மானியத்தின் கீழ் சபைக்குக்கு கிடைத்த மின்பிறப்பாக்கியின் பற்றரி 2016 மார்ச் 31 ஆந் திகதி தொலைந்து போயிருந்ததுடன் அது தொடர்பாக

முறையான பரிசேதனையொன்று நடாத்தப்படாமல் உரிய திகதியில் கடமையில் ஈடுபட்டிருந்த காலவாளியிடமிருந்து ரூபா 19,375 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(எ) வீதி விளக்கு தூண்களுக்காக தேவையான பிரதீப்த மின்குமிழ் மற்றும் ஏனைய துணைப் பாகங்கள் என்பன களஞ்சியத்திலிருந்து உரிய பிரிவுகளுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் கழற்றி அகற்றப்பட்ட மின்குமிழ்கள் சரியான முறைமையொன்றைப் பின்பற்றி மீண்டும் களஞ்சியத்திற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சபையினால் பெறப்பட்ட பிரதீப்த மின்குமிழ்களுக்கான சாதாரணமான ஒருவருட உத்தரவாதக் காலமொன்று இருந்தபோதும், கழற்றி அகற்றப்பட்ட மின்குமிழ்களுக்குரிய இந்த உத்தரவாதக் காலத்தை சபையினால் சரியாக கண்டறிவதற்கான முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஏ) பொருட் பதிவேடு உரிய மேற்பார்வையின்றி பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு வருட இறுதித் திகதியிலும் உள்ளவாறு இந்த பதிவேடு சமப்படுத்தப்பட்டு மீதி முன்கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**

(அ) வெற்றிடமாகவுள்ள செயலாளர் பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காக முகாமைத்துவ உதவியாளர் தரத்தின் முதலாம் வகுப்பு பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியின் விபரங்களின்படி சபையில் ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி, ஒரு நூலகர் பதவி, ஒரு வருமானப் பரிசோதகர் பதவி மற்றும் ஒரு வேலைப் பரிசோதகர் பதவி என்பன வெற்றிடமாகக் காணப்பட்டதுடன், முகாமைத்துவ உதவியாளர் பதவியொன்றில் மிகையும் காணப்பட்டது.

(இ) வேலைக்கள தொழிலாளராக 20 ஊழியர்களும், சுகாதாரத் தொழிலாளர்களாக 14 ஊழியர்களும் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், 11 வேலைக்கள தொழிலாளர்களும், 06 சுகாதாரத் தொழிலாளர்களும் மாத்திரம் களக் கடமைகளில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமை**

சபைக்குரிய வீதிகளை சரியாக இனங்கண்டு அவற்றை பதிவேடுகளில் உள்ளடக்குவதற்கும், வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் உரிய அந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை**

(அ) சபைக்குச் சொந்தமான சபை அலுவலகம் மற்றும் நூலகத்துடன் உள்ள நிலத்தின் பின்பக்கம் 10 பேர்ச் அளவான காணி அளவு அனுமதியற்ற நபரொருவர் பலவருடமாக குடியிருந்து வருவதுடன் இந்த நபரை அந்த இடத்திலிருந்து அகற்றுவதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 நவம்பர் மாதத்தில் திவிநெகும திணைக்களத்தின் மூலம் GI குழாய் 720 எண்ணிக்கையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த குழாய்களில் வலல்லாவிட்ட மற்றும் அகவலத்த பிரதேச சபைகளுக்கு முறையே 210 GI குழாய்கள் மற்றும் 128 குழாய்கள் என 338 குழாய்கள் மொத்தமாக வழங்கப்பட்டிருந்தன. இந்த குழாய்களின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் தொடர்பாக இருப்புப் புத்தகங்களில் குறிப்பிடப்படாதிருந்ததுடன் பெறுவனவுகள் தொடர்பாக பொருள் பெறுகைக் குறிப்பு (GRN) விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த குழாய்களில் 118 குழாய்கள் சபையில் காணப்பட்டதுடன், காணாமல் போன 264 குழாய்கள் தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், எஞ்சிய 118 குழாய்களின் அளவை இருப்புப் புத்தகங்களில் பதிவதற்கோ அல்லது போதியளவான பிரகாரம் பாதுகாப்பினை வழங்குவதற்கோ நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் பௌதீக ரீதியில் 98 குழாய்கள் காணப்பட்டமையால் மேலும் 20 குழாய்கள் தொலைந்து போயிருந்தன.

**3.4.3 கையேற்கப்படாத சொத்துக்கள்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 32 மயான நிலங்களில் 02 மாத்திரம் சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்டதுடன் எஞ்சிய 30 மயான நிலங்களையும் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.4 ஒப்பந்த நிர்வாகம்**

**(அ) லபுதொல வீதியை அபிவிருத்தி செய்தல்**

சபையினால் ரூபா 1,299,622 தொகை செலவில் 87 மற்றும் 133 மீற்றர்கள் என 02 பகுதிகளின் கீழ் இந்த வீதி அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், வீதியின் 87 மீற்றர் ஆன முதலாவது பகுதி குறித்த நியமங்களுக்கு இணங்க நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சபைக்குரிய பழைய நூலகக் கட்டிடத்தை நவீனமயப்படுத்தல்**

40 வருடங்களை விட பழைமையான இக்கட்டிடத்தில் டைல் பதித்தல் மற்றும் கூரைக்கு சிவிலிம் அடிப்பதற்காக சபையினால் ரூபா 4,267,292 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், இவ்வாறான செலவினமொன்றைச் செய்வதற்கு முன்னர் இந்தக் கட்டிடத்தின் உறுதித்தன்மை தொடர்பாக மூன்றாம் தரப்பினர் மூலம் தரத்தன்மை தொடர்பாக சான்றிதழொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கட்டிடத்தின் கூரை நடுவில் கீழ் இறங்கிய வகையிலும் இடைக்கிடையே சுவர்களில் வெடிப்பு அடையாளங்களும் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில், பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமமானம் 10 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையும் செலவினம் 12 சதவீதம் முதல் 88 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 மாகாண கணக்குகள் செயற்குழுவின் தீர்மானங்களை அமுல்படுத்தாமை**

2018 சனவரி 04 மற்றும் 11 என்ற தினங்களில் நடைபெற்ற மாகாண அரச கணக்குகள் செயற்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 1.2(ஈ), 1.3.3(i), 1.3.3(vi), 1.5, 1.6(ii), 2012 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.1.1(இ), 2.2(ஆ)(i), 2.2.4(ஆ)(ii) மற்றும் 2013 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 1.2.2(ஆ), 1.3.2 என்ற பந்திகள் தொடர்பாக வழங்கப்பட்ட கட்டளைகள் 2018 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | | பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| | (ii) | அறிவித்தல் பதாதை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் போன்ற வருமானங்களை சரியாக இனங்காண்பதற்குரிய முறையான மெய்மையாய்வு நடாத்தப்படாமை |
| (இ) களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | பதிவேடுகள் முறையான பிரகாரம் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| | (ii) | வாகனங்களிலிருந்து கழற்றி அகற்றப்பட்ட பாகங்கள் தொடர்பாக உரிய பதிவேடொன்று பராமரிக்கப்படாமை. |
| (ஈ) ஊழியர் முகாமைத்துவம் | (i) | சரியான திட்ட முறைமையின் கீழ் வீதி மற்றும் கள தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாமை |
| | (ii) | ஊழியர்களின் கடமை மேற்பார்வை நலிவான நிலையில் காணப்பட்டமை |
| (ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே கணிசமான முரண்கள் காணப்பட்டமை. |
| | (ii) | வருமான மதிப்பீடு சாத்தியமானதாக இன்மை. |